மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

**அசல் வழக்கு எண். 39/2024**

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.அசோக்சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : சுப்பிரமணியன் (பி.வா.சா.3) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

11.12.2025

<u>வாதி தரப்பு குறுக்குவிசாரணை –</u>

1. நான் எத்தனை வருடமாக எனது கடையை அரசுக்கு மதுபானக்கூடம் வைக்க வாடகைக்கு கொடுத்துள்ளேன் என்றால் 3வருடமாக கொடுத்துள்ளேன். அதற்கு அருகிலேயே சிறிய கடை வைத்துள்ளேனா என்றால் வேலைக்கு ஆள் வைத்து கடை வைத்துள்ளேன். லீனா எனது மனைவி ஆவார். அவர் பெங்களூரில் வசித்து வருகிறார். எனது மனைவி அடுப்பு கறி வியாபாரம் செய்து வருகிறார். என்னுடைய ஆதார் அடையாள அட்டை பெங்களூர் முகவரியில் உள்ளது என்றால் இல்லை, கண்டுகொண்டான் மாணிக்கத்தில் உள்ளது. எனது மனைவிக்கு எங்கே ஆதார் அட்டை உள்ளது என்றால் கண்டுகொண்டான் மாணிக்கத்தில் உள்ளது, பெங்களூரில் இல்லை. ஜமால்பீவி வழக்கு தாக்கல் செய்துள்ள சர்வே எண் என்ன என்று எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண். 59/9 என்னுடைய சர்வே எண். 59/3 அவருடைய சர்வே எண் ஆகும். அவருடைய சர்வே எண். 59/8 என்றால் சரியல்ல. ஜமால்பீவி தாவா சொத்தில் எத்தனை வருடமாக வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் 2, 3 வருடமாக குடியிருந்து வருகிறார். எனது மனைவி கிரையம் வாங்கியபிறகு வீடு கட்டினாரா அல்லது அதற்கு முன்பு வீடு கட்டினாரா என்றால் எனக்கு தெரியாது. ஜமால்பீவி வீடு கட்டியது சம்பந்தமாக அவர் மீது புகார் கொடுத்துள்ளோமா என்றால் நாங்கள் புகார் கொடுக்கவில்லை.

2. ஜமால்பீவி வீட்டை அப்புறப்படுத்துவற்கு எதிர்கோரிக்கை வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது மனைவி இந்த வழக்கில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. வாதி எவ்வளவு சொத்திற்கு

வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 14 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி தாக்கல் செய்துள்ள சொத்திற்கு வடக்கே திருச்சுழி ரோடு உள்ளது என்றால் சரிதான். கிழக்கே தவுடண் புஞ்சை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண். 59/3ற்கு தெற்கே திருச்சுழி ரோடு உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 59/8ற்கு தெற்கே என்ன இடம் உள்ளது என்றால் பெரியாம்பிள்ளை இடம் உள்ளது. அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. சர்வே எண். 59/8ற்கு தெற்கே ராக்கம்மாள் நிலம் உள்ளது என்றால் சுப்பையா இடம் உள்ளது. சர்வே எண். 59/8ற்கு மேற்கே வேல்முருகன் இடம் உள்ளது என்றால் சரிதான். வாசாஆ1 சொத்தில் நரிக்குடி – திருச்சுழி ரோட்டிற்க்கும் தெற்கு, தவுடண் புஞ்சைக்கும் மேற்கு, பெரியாம்பிள்ளை, ராக்கம்மாள் புஞ்சைக்கும் வடக்கு, வேல்முருகன் புஞ்சைக்கும் கிழக்கு உள்ள இடம் தாவா சொத்து உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்திற்கு நான் தீர்வை செலுத்திய ரசீது செலுத்தியுள்ளேனா என்றால் செலுத்தியுள்ளேன், அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தின் 14 செண்டிற்கு வாதி ஜமால்பீவியின் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். எனது மனைவி பெயருக்கு சர்வே எண். 59/8ல் எத்தனை செண்டிற்கு பட்டா உள்ளது என்றால் 26 செண்டிற்கு பட்டா உள்ளது. எனது மனைவி பெயருக்கு 12 செண்டில் தான் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் விவசாயம் செய்துள்ளோமா என்றால் நாங்கள் பெங்களூரிவில் வசிப்பதால் செய்யவில்லை. விவசாய சாகுபடி அடங்கல் கணக்கு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. தாவா சொத்திற்கு பயீர் காப்பீடு செய்துள்ளோமா என்றால் செய்யவில்லை. வாதியின் கணவர் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. வெளிநாட்டில் இருப்பதாக சொல்கிறார்கள். வாதி என்ன செய்து வருகிறார் என்றால் ஆடு மாடு மேய்த்து வருகிறார். வாசாஆ6 பத்திரத்தை பற்றி எனது மனைவிக்கு எதுவும் தெரியாது என்றும் எனக்கு தான் விபரம் தெரியும் என்று எனது மனைவி விசாரணையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான், நான்தான் கிரையம் வாங்கிக் கொடுத்தேன். எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினோம் என்றால் ரூ.10500/–க்கு கிரையம் வாங்கினோம்.

3. 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு மாமா உறவுமுறை. கருப்பன், வேல்முருகன், பூசாரி எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனக்கு மாமா உறவுமுறை. தாவா சொத்தை நாங்கள் கிரையம் கேட்டோமா அல்லது

1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிக் கொள்ள சொன்னாரா என்றால் அவர்தான் கிரையம் வாங்கிக் கொள்ள சொன்னார். 1ம் பிரதிவாதி பெரியாம்பிள்ளைக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியம் என்றால் கருப்பன், வேல்முருகன், பூசாரி ஆகியோர்களிடமிருந்து கிரையம் வாங்கியதாக ஆவணத்தினை காட்டினார். அசல் ஆவணங்களை எனது கையில் கொடுத்தாரா என்றால் கொடுத்திருப்பார், வீட்டில் இருக்கும். எனது மனைவி கிரையம் வாங்கியஆவணத்தில் பெரியாம்பிள்ளை கிரையம் பெற்ற ஆவணம் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. கிரையம் வாங்கும்போது மூலக் கிரையப்பத்திரத்தை எங்கள் வசம் கொடுத்துள்ளார்கள் என்றால் கொடுத்துள்ளார்கள். வாசாஆ6 ஆவணத்தில் பக்கம் 2ல் தாவா சொத்து எனக்கு பூர்விக பாத்தியப்பட்டது என்று பெரியாம்பிள்ளை தெரிவித்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ6 ஆவணத்தை பொறுத்து நானோ, எனது மனைவியோ எந்த கிரையத்தொகையும் பெரியாம்பிள்ளைக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கிரையம் வாங்குவதற்கு முன்பே வாதி வழக்கு தாக்கல் செய்து வழக்குநிலுவையில் இருந்து வந்தது என்றால் எங்களுக்கும் அதற்கும் எந்த சம்பந்தமில்லை. வாதியை மோசடி செய்யவேண்டும் என்பதற்காக வாசாஆ6 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. வாசாஆ6 ன் படி எனது மனைவிக்கு எந்த உரிமையும், அனுபவமும், பாத்தியமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கு ஜமால்பீவி வீட்டு வரி செலுத்தி வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பட்டா சர்வே எண். 59/8பி–க்கு எனது மனைவி பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான், அது **வாசாஆ15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பட்டா சர்வே எண். 59/8A–ற்கு ஜமால்பீவி பெயரில் உள்ள பட்டா என்றால் இல்லை, தவறாக உள்ளது. ஜமால்பீவி கட்டியுள்ள வீட்டிற்கு மின்இணைப்பு உள்ளது என்றால் சரிதான். பெரியாம்பிள்ளை ஜமால்பீவிக்கு 29.06.2010ம் தேதி வாசாஆ12 அறிவிப்பு கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டாரா என்றால் எனக்கு தெரியாது. 1996ம் வருடம் பெரியாம்பிள்ளைக்கு பிவாசாஆ2 விடுதலை பத்திரம் கருப்பன், வேல்முருகன், பூசாரி வகையறா எழுதி கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பெரியாம்பிள்ளைக்கும், ஜமால்பீவிக்கும் காவல் துறையில் விசாரணை நடந்த விபரம்

தெரியுமா என்றால் என்மீதும் புகார் கொடுத்தார்கள். எத்தனை வருடத்திற்கு முன்பு என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் 2011ம் வருடத்திற்கு பின்னர்தான் கொடுத்தார்கள். தாவா சொத்தில் எனது மனைவிக்கோ, பெரியாம்பிள்ளைக்கோ எந்த அனுபவமும் கிடையாது என்றாலும் வாதிதான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் சரியல்ல. வழக்கு நடக்கும் விபரம் தெரிந்து நாங்களும் பெரியாம்பிள்ளையும் சேர்ந்து மோசடி ஆவணங்களை உற்பத்தி செய்து வீண் வம்பு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.